Get Your Premium E-Commerce
WEBSITE &
ANDROID APP
for Just ₹Rs. 2999/-


+91 9853719337, 7436914247



# ஆனந்த பாஸ்கர்

PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன்..
www.anandabhaskar.com
anandabhaskarnews@gmail.com








சென்னை மலர்: 01 இதழ்: 66 31.08.2025 ஞாயிற்றுக்கிழமை
Chennai Volume: 01 Issue: 66 Sunday pages 4 Rs.5/-


## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(31–8–2025)
விசுவாவசு ஆண்டு, ஆவணி–15

பிறை: வளர்பிறை

திதி
அஷ்டமி இரவு 1127 வரை
பிறகுநவமி.

நட்சத்திரம்:
அனுஷம் மாலை 5.00 வரை
பிறகு கேட்டை

யோகம்
மரணயோகம்

ராகுகாலம்
மாலை 4.30 – 6.00 மணி.

எமகண்டம்
நண்பகல் 12.00–1.30 மணி

சூலம் –மேற்கு

நல்ல நேரம் :
காலை 7–8 மணி.
மாலை 3–4 மணி

| | |
|---|---|
| மேஷம் | ஆதரவு |
| ரிஷபம் | நிம்மதி |
| மிதுனம் | அனுகூலம் |
| கடகம் | உழைப்பு |
| சிம்மம் | மகிழ்ச்சி |
| கன்னி | முயற்சி |
| துலாம் | ஆதாயம் |
| விருச்சிகம் | சுகம் |
| தனுசு | வாழ்வு |
| மகரம் | சுபம் |
| கும்பம் | நட்பு |
| மீனம் | திறமை |

# “ஆளுமைமிக்க மூப்பனார் பிரதமர் ஆவதை தடுத்தனர்”

## மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன்

**சென்னை, ஆக.31:**

“ஆளுமைமிக்க மூப்பனார் பிரதமர் ஆவதை தடுத்ததை, தமிழகத்துக்கு நடந்த துரோகம் என்று கருதுகிறேன்” என மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மாநில காங்கிரஸ் நிறுவனர் மூப்பனாரின் 24-வது நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை,தேனாம்பேட்டையில் உள்ள அவரது நினைவிடத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நிர்மலா சீதாராமன், பாஜக தமிழக தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.



பின்னர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் பேசியதாவது: எளிமையும், நேர்மையும், தேசியமும் கலந்த ஒரு தேசிய கட்சியின் தலைவராக இருந்தவர் மூப்பனார். அவருக்கு நாடு தழுவிய அளவில் மதிப்பும், மரியாதையும் இருந்தது. ஆளுமைமிக்க மூப்பனார் தமிழகத்துக்கே பெருமை சேர்க்கும் வகையில், பிரதமராக வேண்டிய சந்தர்ப்பம் உருவானது. ஆனால், அவர் பிரதமராக வேண்டிய தருணத்தை அவர்கள் தடுத்தனர். அந்த சக்தி யார் என்று நமக்கு தெரியும். தமிழ், தமிழ் கலாச்சாரம், தமிழின் புகழ் என்று திரும்பத் திரும்ப பேசுபவர்கள் தமிழர் பிரதமர் ஆக வேண்டிய அந்த தருணத்தில் ஆதரவு தராமல் தடுத்தனர். இதையும் நாம் மனதில் வைத்து கொள்ள வேண்டும். இதனை மறக்கவும் முடியாது. ஆளுமைமிக்க மூப்பனார் பிரதமர் ஆவதை தடுத்ததை, தமிழகத்துக்கு நடந்த துரோகம் என்று கருதுகிறேன். அரசியல் இங்கே பேசக் கூடாது. மன்னித்து விடுங்கள். இங்கு புகழஞ்சலி செலுத்த வந்து இருக்கிறோம்.

தமிழகத்தில் மூப்பனாரின் கொள்கைகளுக்கு ஏற்றவாறு நல்லாட்சி அமைய நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டிய தருணம் இது. 2026 தேர்தலில் தமிழகத்தில் ஒரு பெரும் மாறுதலை கொண்டு வர வேண்டிய தேவை நமக்கு உள்ளது. தமிழக மக்கள் நல்லாட்சி வேண்டும் என கேட்கிறார்கள். ஒரு குடும்பம் பிழைத்துக் கொண்டிருக்கிறது. இதனால் தமிழ் மக்களுக்கு ஒரு ஆதரவும் இல்லை.

மக்கள் அனைவருக்கும் தொண்டு ஆற்றுவது நமது கடமை. அதனால் உங்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி கைகூப்பி கேட்டுக் கொள்கிறேன். இந்த கூட்டணியை நல்லபடியாக நடத்த வேண்டும். இந்த கூட்டணியின் மூலமாக மக்களுக்கு செய்ய வேண்டிய தொண்டை ஆற்ற வேண்டும். சிறிய, சிறிய உட்பூசலை பற்றி நாம் கவலை கொள்ள தேவையில்லை. முதிர்ச்சியடைந்த பக்குவமாக இருக்கக்கூடிய தலைவர்கள் இங்கு இருக்கின்றனர். எல்லோரும் சேர்ந்து மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ட்ரம்ப்பின் வரிகளை ரத்து செய்து அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

**வாஷிங்டன், ஆக.31:**



இந்திய பொருட்களுக்கு ஏற்கெனவே 25 சதவீத வரி விதித்த ட்ரம்ப், ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதை காரணம் காட்டி கூடுதலாக 25 சதவீதம் வரியை விதித்து அதனை 50 சதவீதமாக உயர்த்தினார். ட்ரம்ப்பின் இத்தகைய நடவடிக்கைகளால் அமெரிக்காவுக்கான இறக்குமதி பாதிக்கப்படும், உள்நாட்டில் பொருட்களின் விலை உயரும், நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று அமெரிக்க மக்களில் பலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

ட்ரம்ப்பின் வரி விதிப்பு முடிவுகளுக்கு எதிராக கடந்த மே மாதம் நியூயார்க் வர்த்தக நீதிமன்றம் உத்தரவுகளை பிறப்பித்திருந்தது. இந்நிலையில், அமெரிக்க கூட்டாட்சி மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (வெள்ளிக்கிழமை) அளித்த தீர்ப்பில், “உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டுக்கு எதிராகவும் ட்ரம்ப் அதிக வரிகளை விதித்துள்ளார். இதை நியாயப்படுத்தவே, தேசிய அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது. ட்ரம்ப்பின் பெரும்பாலான வரிவிதிப்பு சட்டவிரோதமானது. கூடுதல் வரி விதிப்பை நீக்க வேண்டும்.

வரிகள் விதிப்பு, அடிப்படையில் காங்கிரஸின் அதிகாரத்துக்கு உட்பட்டது. அது வரி விதிப்பில் அதிபருக்கு சில அதிகாரங்களை வழங்கி உள்ளது. எனினும், வரம்பற்ற அதிகாரத்தை அதிபருக்கு காங்கிரஸ் வழங்கவில்லை. அத்தகையநோக்கத்தை காங்கிரஸ் கொண்டிருக்கவில்லை.” என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. நியூயார்க் வர்த்தக நீதிமன்றத்தின் தீர்ப்பை, ஏறக்குறைய உறுதி செய்துள்ள கூட்டாட்சி மேல்முறையீட்டு நீதிமன்றம், அதேநேரத்தில், மேல்முறையீட்டுக்கு அக்டோபர் 14 வரை கால அவகாசமும் அளித்துள்ளது.

இந்த தீர்ப்பு, ட்ரம்ப்புக்கு பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது. இந்ததீர்ப்பை அமெரிக்க உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்துமானால், கூடுதல் வரி விதிப்பின் மூலம் பெறப்பட்ட பணத்தை திருப்பி தர வேண்டிய நிலை ஏற்படும் என கூறப்படுகிறது.

இதனிடையே, நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு டொனால்ட் ட்ரம்ப் அதிருப்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், “அனைத்து வரி விதிப்புகளும் தொடர்ந்து நடைமுறையில் உள்ளன. இந்த வரிகள் நீக்கப்பட்டால் அது நாட்டுக்கு ஒரு முழுமையான பேரழிவாக இருக்கும். இந்த தீர்ப்பு உறுதிப்படுத்தப்படுமானால் அது அமெரிக்காவை அழித்துவிடும்.” என்று கடுமையாக விமர்சித்துள்ளார்.

# திருத்தணியில் சீமான் தலைமையில் மரங்களின் மாநாடு தொடங்கியது



**திருத்தணி, ஆக.31:**

நாம் தமிழர் கட்சியின் சுற்றுச்சூழல் பாசறை சார்பில் மரங்களோடு பேசுவோம், மரங்களுக்காகப் பேசுவோம் என்ற தலைப்பில் திருத்தணி அருகே அருங்குளம் கிராமத்தில் மரங்களின் மாநாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. சமீபத்தில் மாநாடு நடைபெறும் இடத்தை நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த நிலையில் அருங்குளம் கிராமத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் சீமான் தலைமையில் இன்று மரங்களின் மாநாடு நடந்தது. மாநாட்டில் கட்சி நிர்வாகிகள், பொது மக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், நம்மாழ்வார், சுந்தர்லால் பகுகுணா, மிரா அல்பாசா, வங்காரி மாத்தாய், நடிகர் விவேக் ஆகியோர் படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். அவர்களின் நினைவாக மரக்கன்றுகளை நட்டார்.

மேலும் சுற்றுச்சூழல் உறுதிமொழியை வெளியிட்டார். மாநாட்டு ஏற்பாடுகளை செய்தவர்களுக்கு புத்தகங்கள் கொடுத்து சீமான் பாராட்டினார். மரங்கள் தொடர்பான கவிதை புத்தகங்களை சீமான் வெளியிட்டார். பின்னர் மரங்களோடு பேசுவோம்; மரங்களுக்காக பேசுவோம் என்ற தலைப்பில் பேசினார்.

# நாளை முதல் நெல் கொள்முதல் விலை ரூ.2,545ஆக அதிகரிப்பு- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, ஆக.31:**

மத்திய அரசு 2025-2026-ம் ஆண்டிற்கான நெல் கொள்முதல் விலையை தற்போது நிர்ணயித்து உள்ளது. மத்திய அரசு நிர்ணயிக்கும் நெல் கொள்முதல் விலையைவிட விவசாயிகளுக்கு கூடுதல் விலை வழங்கும் திட்டத்தை கலைஞர் ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தினார்.

கலைஞர் வழியில் தமிழ்நாட்டின் நலம் காத்து வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மத்திய அரசு இந்த ஆண்டில் நிர்ணயம் செய்துள்ள சன்னரக நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,389 என்பதை ரூ.2,545 என உயர்த்தி உள்ளார். அதே போல, பொதுரக நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,369 என்பதை ரூ.2,500 என உயர்த்தியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உயர்த்தி நிர்ணயித்துள்ள நெல் கொள்முதல் விலையில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் 1.9.2025 முதல் 31.8.2026 வரை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும்.

இதற்கான முதலமைச்சர் பிறப்பித்துள்ள உத்தரவு 29-ந்தேதி அன்று அரசாணையாக வெளியிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவின்படி, இந்த ஆண்டில் விவசாயிகளிடமிருந்து மொத்தம் 42 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்படும். இதில் சன்ன ரக நெல் 30 லட்சம் மெட்ரிக் டன். பொதுரக நெல் 12 லட்சம் மெட்ரிக் டன்.

தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் பொற்கால ஆட்சியில் 2024-2025 நெல் கொள்முதல் பருவத்தில் 47.97 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுஉள்ளது.

முதல்-அமைச்சரின் 51 மாத கால ஆட்சியில் இதுவரை மொத்தம் 1.85 கோடி மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 44 ஆயிரத்து 777 கோடியே 83 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில் திராவிட மாடல் அரசு விவசாயிகளுக்கு வழங்கியுள்ள ஊக்கத் தொகை மட்டும் 2 ஆயிரத்து 31 கோடியே 29 லட்சம் ரூபாய் ஆகும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அரும்பாடுபட்டு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லில் ஒரு நெல்மணி கூட வீணாகக் கூடாது என்ற உன்னத லட்சியத்துடன் கொள்முதல் செய்யப்படும் நெல்லை திறந்தவெளியில் வைத்திடக் கூடாது என்பதற்காக 827 கோடியே 78 லட்சம் மதிப்பீட்டில் 7 லட்சத்து 33 ஆயிரத்து 350 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு வளாகங்களைக் கட்டிஉள்ளார்.முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி நெல் கொள்முதல் விலையை தற்போது உயர்த்தியுள்ளது விவசாயிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி இருவரும் இன்று (சனிக்கிழமை) நேரில் சந்தித்து நெல் கொள்முதல் விலையை உயர்த்தி தந்து விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளமைக்காக நன்றி தெரிவித்தார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அண்ணாமலை குறித்து விமர்சிக்க வேண்டாம்: அதிமுக நிர்வாகிகளுக்கு இபிஎஸ் அறிவுறுத்தல்..!

**சென்னை, ஆக.31:**



அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் அதிமுக தலைமையகத்தில் நேற்று எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. அப்போது வருகின்ற சட்டமன்ற தேர்தலை சந்திப்பது தொடர்பாக தீவிர ஆலோசனை நடத்தப்பட்டது.

இந்தகூட்டத்தின்போது, தமிழக முன்னாள் தலைவர் அண்ணாமலையை விமர்சிக்க வேண்டாம் என் எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தியுள்ளார். அண்ணாமலை நம்மை பற்றி எதுவும் பேசுவதில்லை. நீங்களும் அவரை பற்றி எதுவும் பேச வேண்டாம். கூட்டணியில் சலசலப்பை ஏற்படுத்த தேவையற்ற விவாதங்களை தவிர்க்குமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

கூட்டணிக்குள் சலசலப்பு ஏற்படாதா? என பலர் காத்திருப்பதால் அதற்கு இடம் தந்து விடக்கூடாது எனவும் அறிவுறுத்தியுள்ளார். அத்துடன் 2026 சட்டமன்ற தேர்தலுக்கான பணிகளை மேலும் வேகப்படுத்துமாறும் நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சமீபத்தில் நெல்லையில் நடைபெற்ற பாஜக கூட்டத்தில் அண்ணாமலை பேசும்போது “எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சராக்க பாடுபட வேண்டும்” எனக் குறிப்பிட்டிருந்தார்.

# ரஷ்யாவின் ட்ரோன் தாக்குதலில் உக்ரைனின் மிகப் பெரிய போர்க்கப்பல் மூழ்கியது

**மாஸ்கோ, ஆக.31:**

உக்ரைன் நாட்டின் மிகப் பெரிய போர்க்கப்பலை, ட்ரோன் மூலம் ரஷ்யா தகர்த்தது. இதில் உக்ரைன் வீரர் ஒருவர் உயிரிழந்தார், பலர் காயம் அடைந்தனர். காணாமல் போன வீரர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெறுவதாக உக்ரைன் கடற்படை தெரிவித்துள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரை நிறுத்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப் முயற்சி எடுத்தார். ஆனால் ரஷ்ய அதிபர் புதின், உக்ரைன் மீதான தாக்குதலை இன்னும் நிறுத்தவில்லை. உக்ரைன் மீது ரஷ்யா தீவிர தாக்குதலை நடத்தி வருகிறது.



உக்ரைனில் உள்ள கட்டிடங்கள் மற்றும் ட்ரோன் தயாரிப்பு நிலையங்கள் மீது ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலை நடத்தி வந்த ரஷ்யா, தற்போது உக்ரைன் போர்க்கப்பல்களை குறிவைத்து தாக்குதலை தொடங்கியுள்ளது.

கடந்த சில மாதங்களாகவே பலவகையான ட்ரோன்களின் தயாரிப்பை ரஷ்யா தீவிரப்படுத்தியது. போர்க்கப்பல்களை தாக்குவதற்காக ‘ஷீட்ரோன்களை’ தயாரித்தது. தற்போது இதன் மூலம் முதல் முறையாக தாக்குதலை தொடங்கியுள்ளது. ரிமோட் மூலம் தண்ணீரில் படகு போல் செல்லும் இந்த ட்ரோன், போர்க் கப்பல்களை தாக்கி மூழ்கடிக்கும் திறன் வாய்ந்தது.

உக்ரைன் கடற்படையில் மிகப் பெரிய போர்க்கப்பலாக ‘சிம்ஃபெரோபோல்’ இருந்தது. இது கடந்த 2021-ம் ஆண்டு உக்ரைன் கடற்படையில் இணைக்கப்பட்டது. லகுனா ரக போர்க்கப் பலான இதில் ரேடியோ, எலக்ட்ரானிக், ரேடார் மற்றும் ஆப்டிக்கல் வேவு கருவிகள் இருந்தன. இந்தக் கப்பல் டனுபே ஆற்றை கடந்து சென்றபோது, அதன் மீது ரஷ்யா, ‘ஷீ ட்ரோன்’ மூலம் தாக்குதல் நடத்தியது. இதில் உக்ரைன் போர்க்கப்பல் சிம்ஃபெரோபோல் வெடித்து சிதறியது. உக்ரைன் போர்க்கப்பலை, ஷீ ட்ரோன் மூலம் ரஷ்யா வெற்றிகரமாக தாக்கியது இதுவே முதல் முறை.

இந்த தாக்குதலில் உக்ரைன் வீரர் ஒருவர் உயிரிழந்தார், பலர் காயம் அடைந்தனர். காணாமல் போன வீரர்களை தேடும் பணி நடைபெறுவதாக உக்ரைன் கடற்படை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். இந்தக் கப்பல் மூழ் கடிக்கப்பட்டதாக ரஷ்ய ராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது.


தினம்தோறும் வெளிவரும்
ஆனந்தபாஸ்கர் இதழை
https://epaper.
anandabhaskar.com/
இணையதளத்தில்
படித்து மகிழலாம்.

# ஊஞ்சல் உற்சவம்



தஞ்சாவூர்,ஆக.31: தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீஅலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேசப் பெருமாளுக்கு நேற்று (29.08.2025) ஆங்கில மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை முன்னிட்டு காலை திருமஞ்சனமும், மாலை 7 மணி அளவில் ஸ்ரீஅலமேலு மங்கை தாயார் உள்புறப்பாடு மற்றும் ஊஞ்சல் சேவை சிறப்பாக நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், ஸ்ரீஅலமேலு மங்கை தாயார் ஊஞ்சல் சேவை குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

# துளிர் அறிவியல் வினாடி வினா போட்டி



தமிழ்நாடு அறிவியல் இயக்கம், இராமேஸ்வரம் தாலுகா கிளை சார்பில் துளிர் அறிவியல் வினாடி வினா போட்டி இராமேஸ்வரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

# செப்டம்பர் 1ஆம் தேதி முதல் விக்கிரவாண்டி சுங்கச்சாவடி கட்டணம் உயர்வு..!




விக்கிரவாண்டி,ஆக.31: சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில் அமைக்கப் பட்டுள்ள விக்கிர வாண்டி சுங்கச்சாவடி மிகவும் பிசியாக இயங்கும் சுங்கச்சாவடிகளில் ஒன்று. நாள் ஒன்றிற்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட வாகனங்கள் சென்னையில் இருந்து திருச்சி நோக்கி செல்லும். அதேபோல் திருச்சியில் இருந்து சென்னைக்கு வரும். இந்த நிலையில் வருகிற 1ஆம் தேதி முதல் (நாளை), அதாவது திங்கட்கிழமை முதல் விக்கிரவாண்டி சுங்கச்சாவடி கட்டணம் உயர்த்தப்படுகிறது.

நாள் ஒன்றுக்கு ரூ.5 முதல் ரூ.20 வரையும், மாத கட்டணம் ரூ.70 முதல் ரூ.395 வரையும் உயருகிறது.

கார்/ பயணிகள் வேன்- ஒரு முறை செல்ல 105 ரூபாய் (பழைய கட்டணம் 105 ரூபாய்). திரும்பி வருவதாக இருந்தால் 160 ரூபாய் (பழைய கட்டணம் 155 ரூபாய்). மாதந்திர பாஸ் 3170 ரூபாய் (பழைய கட்டணம் 3100 ரூபாய்) ஆகும்.

லைட் கமர்சியல் வாகனங்கள் - ஒருமுறை செல்ல 185 ரூபாய் (பழைய கட்டணம் 185 ரூபாய்). திரும்பி வருவதாக இருந்தால் 275 ரூபாய் (பழைய கட்டணம் 270 ரூபாய்). மாதாந்திர பாஸ் ரூ. 5545 (பழைய கட்டணம் 5420 ரூபாய்) ஆகும்.

டிரக்/பஸ்- ஒரு முறை செல்ல 370 ரூபாய் (பழைய கட்டணம் 360 ரூபாய்). திரும்பி வருவதாக இருந்தால் 555 ரூபாய் (பழைய கட்டணம் 540 ரூபாய்). மாதாந்திர பாஸ் ரூ. 11085 (பழைய கட்டணம் 10845 ரூபாய்).

மல்டி பிள் ஆக்சில் வாகனங்கள் (இரண்டு ஆக்சிலுக்கு மேற்பட்டவை)- ஒருமுறை செல்ல 595 ரூபாய் (பழைய கட்டணம் 580 ரூபாய்). திரும்பி வருவதாக இருந்தால் 890 ரூபாய் (பழைய கட்டணம் 870 ரூபாய்). மாதாந்திர பாஸ் 17820 ரூபாய் (பழைய கட்டணம் 17425 ரூபாய்).

பள்ளி பேருந்துகளுக்கு கிடையாது. மாதாந்திர பாஸ் 1000 ரூபாய் ஆகும் (பழைய கட்டணம் 100 ரூபாய்).

# ஆண்களும் தாயாக முடியும்: மரங்களின் மாநாட்டில் சீமான் பேச்சு..!




மரங்களின் மாநாட்டில் நாம் தமிழர் கட்சி கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசியதாவது:-

பூமியை சமநிலைப் படுத்து வதில் மரங்களின் பங்கு அதிகமானது என்பது அறிஞர்களின் கருத்து. ஒரு மரத்தை நட்டாலே ஆண்களும் தாயாக முடியும். மரம் நம் அன்னை, நம் தாய்.

மரங்கள் வெட்டப்படுவதால் பருவநிலை மாறி வருகிறது. இனி இந்த மண்ணில் பருவமழை, பெருமழை இல்லை. புயல் மழை மட்டும்தான். புவி வெப்பமாவதுதான் இதற்கு காரணம். பூமியின் வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க, ஒரு கட்டத்தில் அதை தாங்க முடியாமல் கடல் பொங்கி கொந்தளிக்கும். அந்த கொந்தளிப்பில் கடலோர கிராமங்கள் விழுங்கப்படும். ஒரு சுனாமியையே நம்மால் கடந்த காலத்தில் தாங்க முடியவில்லை. இதே நிலை தொடர்ந்தால், பூமி பேரழிவை சந்திக்கும்.

இவ்வாறு சீமான் பேசினார்.

# தமிழ்நாடு சிறார் எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் மதுரை மாநகர் துவக்க விழா

மதுரை,ஆக.31: தமிழ்நாடு சிறார் எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம், மதுரை மாநகர் துவக்க விழா நடைபெற்றது.

மணியம்மை மழலையர் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் 70க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சட்டக்கல்லூரி மாணவி தமிழினி மருது பாண்டியன் வரவேற்புரையாற்றி அனைவரையும் வரவேற்றார்.

பெரியார் நெறியாளர் திருமிகு பி.வரதராசன் அவர்கள் முன்னிலை வகித்து விழாவிற்கு நோக்க உரையாற்றினார்.

தமிழ்நாடு சிறார் எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாநில தலைவர் திரு கா. உதயசங்கர் அவர்கள் தலைமை உரையாற்றினார்கள். கல்வித் துறையைச் சேர்ந்த திரு பத்மபாதன் மா. முருகன் அவர்கள் சிறப்புரையாற்ற வாழ்த்துரையை தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா ரவி அவர்கள் வழங்கினார்கள்.



குழந்தைகள் மாறுவேடம் அணிந்து கதை சொல்லியதும் பாடல்கள் பாடியதும் விழாவை கூடுதல் சிறப்பாக்கியது. விழாவில் இறுதி நிகழ்ச்சியாக பள்ளி மாணவன் வி ஆ சான்றோன் நன்றி கூறினார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை திருமதி மு சுலைகா பானு நஜிமுதீன், உலக சாதனை நல்லாசிரியர் செய்திருந்தார்.

துவக்க விழாவில் சங்கத்தின் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக சநஜிமுதீன் செயலாளராக மு. சுலைகா பானு பொருளாளராக கவிஞர் துளிர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

# தமிழ் மாநில காங்கிரஸ் தஞ்சை மத்திய மாவட்டம் நகர கமிட்டி சார்பில் G. K. மூப்பனாரின் 24 ஆம் ஆண்டு நினைவு தினம்

தஞ்சை,ஆக.31: தமிழ் மாநில காங்கிரஸ் தஞ்சை மத்திய மாவட்டம், நகர, கமிட்டி சார்பில் மத்திய மாவட்ட அலுவலகத்தில் நேற்று காலை மக்கள் தலைவர். அய்யா. G. K. மூப்பனார் அவர்களின் 24 ஆம் ஆண்டு நினைவு தினம் நிகழ்ச்சி நடந்தது.

மத்திய மாவட்ட தலைவர். டி. பி! எஸ். வி. கௌதமன் தலைமையில், மாநகர தலைவர், எம். வெங்கட்ராமன் முன்னிலையில் நடைபெற்றது.

அலங்கரிக்கப்பட்ட ஜி. கே. மூப்பனார் திரு உருவ படத்திற்கு மாநில செயற்குழு உறுப்பினர். என். ஆர். நடராஜன் மாலை அனிவித்து அஞ்சலி செலுத்தினார்.



இந்த நிகழ்ச்சியில். மாநில செயலாளர், சிவ. முரளிதரன், துனை செயலாளர். ஏ. ராம மோகன். சிறுபான்மை பிரிவு தலைவர். ஸ்டீபன் ஆரோக்கியராஜ். மாவட்ட பொது செயலாளர் கோவி. மோகன். மாவட்ட செயலாளர்கள் கே. உலகநாதன், எஸ். மரிய பிரகாசம். மாவட்ட இளைஞரணி தலைவர். ஜெகதீஷ் கோட்ட தலைவர். காசிநாதன். வட்டார தலைவர்கள். அய்யாறு, ஜான் அலெக்ஸ், மாநகர நிர்வாகிகள், ராஜவேல், சாம்பசிவம், மீனாட்சி சுந்தரம். உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளார் மலரஞ்சலி செலுத்தினார்கள்.

# சாதி ஆணவக் கொலைக்கு எதிராக தமிழகம் ஒன்றிணைய வேண்டும் நாட்டைக் காப்போம் அமைப்பு தீர்மானம்

மதுரை, ஆக. 31: சாதி ஆணவக் கொலைகளைத் தடுக்கும் நோக்கில் தமிழகம் முழுவதும் ஓரணி அமைக்க வேண்டும் என மதுரையில் நடைபெற்ற கருத்தரங்கில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

"ஆவணக் கொலைக்கு எதிராக ஓரணியில் தமிழ்நாடு அணிவகுக்குமா?" என்ற தலைப்பில் நாட்டைக் காப்போம் அமைப்பு சார்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு நாட்டைக்காப்போம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் சி.ஜே.ராஜன் தலைமை தாங்கினார்.




வழக்கறிஞர் சந்தனம் முன்னிலை வகித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் மற்றும் எவிடன்ஸ் கதிர் ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

கருத்தரங்கில், சாதி ஆணவக் கொலைகளைத் தடுக்கும் தனி சட்டம் கொண்டு வர வேண்டும், குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

காதல் திருமணத்தால் ஆபத்தில் உள்ள இளைஞர்களுக்கு பாதுகாப்பு அளிக்க சிறப்பு பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என்றும், பள்ளி, கல்லூரிகளில் சாதி எதிர்ப்பு, பாலின சமத்துவம், மனிதநேய கல்வி சேர்க்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், அனைத்து அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள், இளைஞர் இயக்கங்கள் இணைந்து "சாதி ஆணவக் கொலைக்கு எதிரான ஓரணி தமிழகம்" என்ற கூட்டமைப்பு உருவாக்க முடிவு செய்யப்பட்டது.

இறுதியில், "சாதி வெறியால் உயிர் பறிக்கப்படும் நிலையை ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டோம்" என்ற உறுதிமொழியை பங்கேற்பாளர்கள் எடுத்தனர். நாட்டைக்காப்போம் அமைப்பின் மையக் குழு உறுப்பினர் சத்யா நன்றி கூறினார்.

வழக்கறிஞர் சி.ஜே.ராஜன் ஒருங்கிணைப்பாளர் நாட்டைக் காப்போம் 9994368521 என்ற நம்பரில் தொடர்பு கொள்ளலாம்.

# சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம்



இராமநாதபுரம்,ஆக.31: சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் நடந்தது.

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஒன்றியம் சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக் கூட்டம் நடைபெற்றது.

பள்ளி மேலாண்மை குழு கூட்டம் தலைமையாசிரியர் ச.கிறிஸ்து ஞான வள்ளுவன் தலைமையிலும், துணைத்தலைவி கவிதா மற்றும் உறுப்பினர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்திற்கு வருகை புரிந்த உறுப்பினர்களை பள்ளித் தலைமையாசிரியர் ச.கிறிஸ்து ஞான வள்ளுவன் வரவேற்றார். பள்ளியின் செயல்பாடுகள் பற்றி தலைமையாசிரியர் பேசினார்.

எண்ணும் எழுத்தும் திட்ட செயல்பாடு பற்றி ஆசிரியர் பிரதிநிதி அ.தாஹிரா பெற்றோர்களுக்கு விளக்கிக் கூறினார்.

குறுவள மைய அளவில் நடைபெற்ற "கலைத் திருவிழா" போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தலைமையாசிரியர் ச.கிறிஸ்து ஞான வள்ளுவன் பரிசுகள் வழங்கினார்.

நிறைவாக இடைநிலை ஆசிரியை அ.தாஹிரா நன்றி கூற பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# நள்ளிரவில் நடுரோட்டில் வாலிபர்களை கட்டியணைத்து இளம்பெண்கள் முத்தமழை!

திருப்பூர்,ஆக.31: நள்ளிரவு நேரத்தில் நடந்து சென்ற வாலிபர்களை விரட்டி பிடித்து நடுரோட்டில் இளம்பெண்கள் முத்தமழை பொழிந்த சம்பவம் அரங்கேறி உள்ளது. இது ஏதோ வெளிநாடு அல்லது வெளிமாநிலங்களில் நடக்கவில்லை. திருப்பூரில் தான் இந்த கூத்து நடந்துள்ளது.

இதுபற்றிய விவரம் வருமாறு:-

கடந்த சில தினங்களுக்கு முன்பு திருப்பூர் பழைய பஸ்நிலையம் அருகே 2 வாலிபர்களும், இளம்பெண்களும் நள்ளிரவில் நடந்து சென்றனர்.

அப்போது திடீரென ஒரு இளம்பெண் சத்தமாய் 'ஏய்... ஓடாத... ஒரு நிமிஷம் நில்லு.. ஒரு முத்தம் தாரேன்டா வாங்கிக்கோ!' என்று தன்னுடன் வந்த வாலிபரை கட்டி அணைத்து முத்தமழை பொழிந்தார். இதனை சற்றும் எதிர்பார்க்காத அந்த வாலிபர் இளம்பெண்ணுக்கு பயந்து அங்கிருந்து ஓட்டம் பிடித்தார். ஆனால் அவரை அந்த இளம்பெண் விடவில்லை. விரட்டி, விரட்டி அவரை மடக்கி பிடித்து காதல் வசனம் பேசி மயக்கினார்.

இதேபோல் இன்னொரு இளம்பெண்ணும், வாலிபரை நெருங்கி வந்தார்.

நள்ளிரவில் நடுரோட்டில் அரங்கேறிய இந்த சம்பவம் அங்கிருந்தவர்களை முகம் சுழிக்க வைத்தது. அந்த காட்சியை சிலர் பார்த்த போதிலும், மூன்றாவது கண் என்று அழைக்கப்படுகிற கண்காணிப்பு கேமராவிலும் அந்த காட்சி பதிவானது.



தற்போது அந்த வீடியோ, சமூக வலைத்தளங்களில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வேலை விஷயமாக திருப்பூருக்கு படையெடுத்து வரும் இளைஞர்களை குறிவைத்து இளம்பெண் கூட்டம் ஒன்று பணம் பறிக்கும் நோக்கத்தில் இரவு நேரங்களில் சுற்றி வருவதாக புகார் கூறப்படுகிறது. விபசார அழகிகள் சிலர் நள்ளிரவு நேரத்தில் பஸ் நிலையத்தில் டிப்டாப் உடை, மேக்அப்புடன் வலம் வந்து இளைஞர்களை தங்களது முத்த வலையில் சிக்க வைக்கின்றனர். ஜீன்ஸ் பேன்ட், டிசர்ட், சுடிதார் என விதவிதமான உடையுடன் காட்சியளிக்கும் இவர்கள் பஸ்நிலையத்தை ஒட்டியுள்ள சாலைகளில் ஆங்காங்கே நிற்கின்றனர். வேலைதேடிவரும் இளைஞர்களை குறி வைத்து நிற்கும் இளைஞர்கள் புதியதாக வரும் இளைஞர்களை மடக்கி பேச்சுக்கொடுக்கின்றனர்.

புதியதாக வரும் வாலிபர்கள், மயிமாத பட்சத்தில் அதிரடியாக கட்டியணைத்து முகமெங்கும் முத்தம் கொடுக்கிறார்கள். ஒரு கட்டத்தில் இளைஞர்களை மடக்கி விடுதி அறைகளுக்கு அழைத்து சென்று உல்லாசம் அனுபவிக்க செய்து கணிசமான பணத்தை கறந்துவிட்டு வெறுங்கையோடு அனுப்பி வைக்கின்றனர்.

# மதுபோதையில் அட்ராசிட்டி செய்த மாப்பிள்ளையின் நண்பர்கள் - திருமணத்தை நிறுத்திய மணமகள்

கிருஷ்ணகிரி, ஆக.31: கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு தடபுடலாக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. மறுநாள் திருமண வைபோகம் காணவேண்டிய அந்த மண்டபத்தில் வரவேற்பு விழாவில் இருவீட்டாரும் மும்முரமாக இருந்தனர்.

மருத்துவம் சார்ந்த டிப்ளமோ படித்த இளம்பெண்ணுக்கும், ஓசூரில் தனியார் நிறுவனத்தில் வேலைபார்க்கும் டிப்ளமோ படித்த வாலிபருக்கும் தான் இந்த திருமண வரவேற்பு மாலை 6 மணிக்கு தொடங்கியது. இரவு 9.30 மணி வரை எந்தவித பிரச்சனையும் இன்றி வரவேற்பு விழா நடந்தது. அதன்பிறகு தான் டீஜே என்று அழைக்கப்படும் ஆட்டம்பாட்டத்துடன் இசை கொண்டாட்டம் உச்சக்கட்டத்தை தொடங்கியது.



அப்போது அங்கு வந்த மாப்பிள்ளையின் நண்பர்கள் மதுபோதையில் மேடையில் ஏறி குத்தாட்டம் போட தொடங்கினர். ஒரு கட்டத்தில் மாப்பிள்ளையையும் அவர்கள் மேடைக்கு ஏற்றி ஆட வைத்தனர். அத்துடன் நின்றிருந்தால் பரவாயில்லை என்ற ரீதியில் மாப்பிள்ளையின் நண்பர்களில் சிலர் மணமகளையும் மேடைக்கு வருமாறு வற்புறுத்தி குரல் எழுப்பினர்.

ஆனால் தனக்கு இதுபோன்று நடனம் ஆடி பழக்கம் இல்லை என்றும், பொது இடங்களில் நான் இதுபோன்று நடனம் ஆட விருப்பமில்லை என்றும் அவர் கூறினார். ஆனால் அவர் கூறுவதை காது கொடுத்து கேட்காத அந்த வாலிபர்கள் தொடர்ந்து வற்புறுத்திய நிலையில், மணமகளின் உறவினர்கள் சிலர், அப்படி எல்லாம் எங்கள் வீட்டு பெண் ஆட வரமாட்டாள் என்று வாலிபர்களை கண்டித்தனர்.

அதை சொல்ல நீங்கள் யார் என்று மாப்பிள்ளையின் நண்பர்களில் சிலர் மணமகளின் உறவினர்களுடன் திடீரென கைகலப்பில் ஈடுபட்டு உள்ளனர். என்ன நடக்கிறது என்று இரு வீட்டாரும் யோசித்து பார்க்கும் முன்பு இந்த கைகலப்பு தகராறாக முற்றியது.

இதை பார்த்த மணமகள், மாப்பிள்ளையின் குடிகார நண்பர்களின் அற்ப வேண்டுகோளையும், அதற்காக அவர்கள் தனது உறவினர்களை தாக்கியதையும் நினைத்து இனி இந்த மாப்பிள்ளையை நான் கட்ட மாட்டேன். திருமண ஏற்பாடுகளை நிறுத்துங்கள் என்று அதிரடியாக கழுத்தில் அணிந்திருந்த மாலையை கழற்றி வீசினார். இதனால் வரவேற்புடன் திருமணம் நின்றது. உடனே மண்டபத்தில் கட்டப்பட்டிருந்த பேனர்கள், அலங்கார வளைவுகள் போன்றவை அவசர, அவசரமாக இரவோடு இரவாக அகற்றப்பட்டு விட்டன. மேலும் மணமகன், மணமகள் வீட்டாரும் ஊருக்கு திரும்பினார்கள்.

## பள்ளி மேலாண்மை குழு கூட்டம்



**திருவண்ணாமலை, ஆக.31:** திருவண்ணாமலை மாவட்டம் 30.08.2025 கீழ்பென்னாத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இன்று பள்ளி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி தலைவர் மற்றும் பள்ளி மேலாண்மை குழு தலைவர் சரவணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கூட்டப் பொருள் சார்ந்து பள்ளி தலைமை ஆசிரியர் பிரசன்னா அவர்கள் விளக்க உரையாற்றினார். பட்டதாரி ஆசிரியர் முருகன் பள்ளி மாணவர்கள் கல்வி மேம்பாட்டிற்காக அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து பேசினார். இக்கூட்டத்தில் பள்ளி மேலாண்மை குழு துணை தலைவர் மணி, பேரூராட்சி உறுப்பினர் பலராமன், கல்வியாளர் சௌந்தர பாண்டியன், மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு பள்ளி வளர்ச்சி சார்ந்த முன்னெடுக்க வேண்டிய செயல்பாடுகள் குறித்து பேசினார்கள். பள்ளி மேலாண்மை குழு தலைவர் சரவணன், துணைத்தலைவர் மணி, பள்ளி மாணவர்களுக்காக இரண்டு குடிநீர் சுத்திகரிப்பு கருவிகளை அமைத்து தருவதாக தெரிவித்தார்கள். இக்கூட்டத்தில் பள்ளி முன்னாள் மாணவர்களை பள்ளி தூதுவர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டு பேசப்பட்டது. சக்திவேல் கலந்து கொண்டு முன்னாள் மாணவர்களை பள்ளி மேம்பாட்டிற்கு பயன்படுத்திய ஒருங்கிணைத்து குறித்து பேசினார்கள். இறுதியில் உதவி தலைமை ஆசிரியர் ராஜேஷ் அவர்கள் நன்றி கூறினார்.

## அய்யா. G. K. மூப்பனாரின் 24 ஆம் ஆண்டு நினைவு தினம்



**தஞ்சை, ஆக.31:** தமிழ் மாநில காங்கிரஸ் தஞ்சை மத்திய மாவட்டம், நகர, கமிட்டி சார்பில் மத்திய மாவட்ட அலுவலகத்தில் 30.8.2025 காலை மக்கள் தலைவர். அய்யா. G. K. மூப்பனார் அவர்களின் 24 ஆம் ஆண்டு நினைவு தினம் நிகழ்ச்சி, மாநகர தலைவர், எம். வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்றது. அலங்கரிக்கப்பட்ட ஜி. கே. மூப்பனார் திரு உருவ படத்திற்க்கு மத்திய மாவட்ட தலைவர் டி. பி. எஸ். வி, கௌதமன் மாலை அனிவித்து அஞ்சலி செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில். மாநில செயலாளர். சிவ. முரளிதரன், துனை செயலாளர். ஏ. ராம் மோகன். சிறுபான்மை பிரிவு தலைவர். ஸ்டீபன் ஆரோக்கியராஜ். மாவட்ட பொது செயலாளர் கோவி. மோகன். மாவட்ட செயலாளர்கள் மாநில செயற்குழு சிறப்பு அழைப்பாளர் ஜெயகுமார், கே. உலகநாதன், எஸ். மரிய பிரகாசம். மாவட்ட இளைஞரணி தலைவர். ஜெகதீஷ் வழக்கறிஞர் பிரிவு தலைவர். சத்தியமூர்த்தி. கோட்ட தலைவர். காசிநாதன். வட்டார தலைவர்கள். அய்யாறு, ஜான் அலெக்ஸ், மாநகர நிர்வாகிகள்.ராஜவேல். சாம்பசிவம். மீனாட்சி சுந்தரம். உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளார் மலரஞ்சலி செலுத்தினார்கள். மதியம் மகர்நோம்புசாவடி பாரத மாதா முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்கபட்டது

## தொடக்க விழா...



சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப புலத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களின் வகுப்பு தொடக்க விழா நேற்று கல்லூரியில் நடைபெற்றது. இதில் தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி குமார் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். புல முதல்வர் கார்த்திகேயன் விழாவை தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் முதலாம் ஆண்டு மாணவர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.








## விநாயகர் சிலைகள் கரைப்பு......

திருவண்ணாமலை 30.08.2025 வித விதமான விநாயகர் சிலைகள் திருவண்ணாமலையில் 150 விநாயகர் சிலைகள் இன்று கரைக்கப்பட்டன. மேளதளாத்துடன், வானவேடிக்கையுடன் ஊர்வலமாக எடுத்துச் சென்று நீர் நிலைகளில் கரைக்கப்பட்டன.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒருங்கிணைத்த பயன்பாட்டுத் தமிழியல்



**சென்னை, ஆக.31:** தமிழ்நாடு அரசால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் "தமிழியல் ஆய்வுகளில் இதுவரை நிகழ்ந்தவை குறித்தும் நிகழவேண்டியவை குறித்தும்" அறிஞர்கள் உரையாடும் களமாக "அறிஞர்கள் அவையம்" உருவாக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாகப் "பயன்பாட்டுத் தமிழியல்: நிகழ்ந்தனவும் நிகழவேண்டியனவும்" பொருண்மையில் கலந்துரையாடல் 29.08.2025 அன்று சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக மாநாட்டுக் கூடத்தில் நடைப்பெற்றது.

இந்நிகழ்வில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் திரு. ஆர். பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. (ப.நி.) அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் (கூ.பொ.) திரு. கோபிநாத் அவர்கள் வரவேற்புரையாற்றிட, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன, தமிழ்மொழி (ம) மொழியியல் புல உதவிப் பேராசிரியருமான முனைவர் நா. சுலோசனா அவர்கள் நிகழ்வு குறித்து நோக்கவுரை ஆற்றினார்.

தொடர்ந்து, துறை சார்ந்த வல்லுநர்களான முனைவர் த. வி. வெங்கடேஸ்வரன் (பஞ்சாப்) அவர்கள் "அறிவியல் தமிழ்" எனும் பொருண்மையிலும், முனைவர் வ.தனலட்சுமி (பாண்டிச்சேரி) அவர்கள் "இயற்கை மொழி ஆய்வும் மொழிச் செயல்பாடும்" எனும் பொருண்மையிலும்,

திரு. முத்து நெடுமாறன் (மலேசியா) அவர்கள் "தமிழ் எழுத்துருவியல் - அடிப்படைப் பயன்பாடும் அழகியல் நுணுக்கங்களும்" எனும் பொருண்மையிலும்,

திரு. தேனி மு.சுப்பிரமணி (தமிழ்நாடு) அவர்கள் "விக்கிப்பீடியா மற்றும் விக்கிப்பீடியா சகோதரத் திட்டங்களில் தமிழ்" எனும் பொருண்மையிலும், திரு. ஆர். பிரகாஷ் (தமிழ்நாடு) அவர்கள் "நூலகப் பயன்பாட்டியல்: நிகழ்ந்தவையும் நிகழவேண்டியவையும்" எனும் பொருண்மையிலும், திரு. மணி.மணிவண்ணன் (அமெரிக்கா) அவர்கள் "மொழித் தொழில்நுட்பம், தகவல் பாதுகாப்புச் சிக்கல்கள்" எனும் பொருண்மையிலும், திரு. ஆழி செந்தில்நாதன் (தமிழ்நாடு) அவர்கள் "தமிழும் தொழில்நுட்பமும் - பானை முதல் செய்யறிவு வரை" எனும் பொருண்மையிலும், திரு. த.சீனிவாசன் (கனடா) அவர்கள் "தமிழில் கட்டற்ற சொற்பிழைத் திருத்தி மற்றும் இலக்கணம், சொற்பிரிப்பு மென்பொருட்கள்" எனும் பொருண்மையிலும், முனைவர் பழ. அதியமான் (தமிழ்நாடு) அவர்கள் "சொல்லும் சொல்: ஊடகத் தமிழ்" எனும் பொருண்மையிலும் உரை நிகழ்த்தினர்.

இவ்விழாவில் தமிழறிஞர்கள், தமிழார்வலர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள், ஆய்வாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு கோவில்பட்டியில் பள்ளி மாணவர்களுக்கான போதை ஒழிப்பு விழிப்புணர்வு மினி மாரத்தான் போட்டி



**கோவில்பட்டி, ஆக.31:** தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் தேசிய விளையாட்டு தினத்தை முன்னிட்டு தமிழக ஆசிரியர் கூட்டணி கோவில்பட்டி வட்டாரக்கிளை, கோவில்பட்டி உட்கோட்ட காவல்துறை மற்றும் PVT கைப்பந்து கழகம் சார்பில் போதை ஒழிப்பு விழிப்புணர்வு குறித்து பள்ளி மாணவர்களுக்கான மினி மாரத்தான் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோவில்பட்டி துணை கண்காணிப்பாளர் அலுவலகம் முன்பு உள்ள மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் மினி மாரத்தான் போட்டியை கோவில்பட்டி காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஜெகநாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் 300-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். போட்டி தொடங்கும் முன்பு போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழியும் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்தப் போட்டியில் காட்டுநாயக்கன்பட்டி நடராஜன் மேல்நிலைப்பள்ளி மாணவர் மாரிச்செல்வம் முதலிடத்தையும், வன்னி கோனந்தல் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர் பார்த்தசாரதி இரண்டாவது இடத்தையும், காட்டுநாயக்கன்பட்டி நடராஜன் மேல்நிலைப்பள்ளி மாணவர் சக்திவேல் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர். பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் முதல் 10 இடங்களை பிடித்த மாணவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்களை கோவில்பட்டி காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஜெகநாதன் வழங்கினார். மேலும் போட்டியில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் இல்லத்தார் நடுநிலைப்பள்ளி தலைவர் சங்கரன், தமிழக ஆசிரியர் கூட்டணி மாநில பொதுச் செயலாளர் கணேசன், ஸ்ரீ பாலாஜி லேண்ட் ஸ்கேப்பிங் நிறுவன நிர்வாகி சதிஷ் (எ) அருண் தியாகராஜன், தமிழக ஆசிரியர் கூட்டணி தூத்துக்குடி மாவட்ட செயலாளர் ஆசிரியர் ஜீவானந்தம், மாநில செயற்குழு உறுப்பினர் ராமமூர்த்தி, வட்டாரச் செயலாளர் ஜெயக்குமார், வட்டார பொருளாளர் கண்ணன், போக்குவரத்து காவல்துறை உதவி ஆய்வாளர் (பொறுப்பு) பொன்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆசூர் நாகம்பட்டி கிராமத்தில் 24 ம் ஆண்டு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா

### மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் பங்கேற்ப்பு



**கோவில்பட்டி, ஆக.31:** தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கயத்தாறு அருகே உள்ள ஆசூர் நாகம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற அருள்மிகு ஸ்ரீ நாகம்மாள் திருக்கோவில் 24 ம் ஆண்டு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா சீரும் சிறப்பாக நடைபெற்றது.

இதில் ஊர் பெரியவர்கள் மற்றும் பொது மக்களின் அழைப்பினை ஏற்று சிறப்பு விருந்தினராக திமுக சார்பில் மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். ஊர் சார்பாக அவருக்கு மாலை அணிவித்து சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து அங்கு நடைபெற்ற அன்னதான நிகழ்ச்சியினை மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் நாகம்பட்டி ஊர் நாட்டாமைகள் மற்றும் கோவில் தர்மஸ்தாகள் பூவேந்திரபாண்டியன், நட்டார், சங்கரபாண்டியன், பொயாளிமுத்து, மருதையா, ஊர் பொதுமக்கள் மற்றும் சுற்றுவட்டார பக்த கோடிகள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



## தினம் ஒரு குறள்

**மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.** - குறள் 65

తనువు పులకరించు తాకినఁ దన బిడ్డ
మాటవిన్న చెవుల మధుర మగును -కురల్ 65

निज शिशु अंग-स्पर्श से, तन को है सुख-लाभ ।
टूटी- फूटी बात से, श्रुति को है सुख-लाभ ॥ - कुराल 65

Makkalmey Theental Utarkinpam Matru
AvarSorkettal Inpam Sevikku - Kural 65

## மயில் வாகனத்தில்...



கோயம்புத்தூர் 30.08.2025 ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கொலு மண்டபத்தில் நேற்று மூன்றாம் நாளான மயில் வாகனத்தில் விநாயகர் அருள் பாலிக்கும் காட்சி.

## 'உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்'...





திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் 30.08.2025 புதுப்பாளையம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஓரந்தவாடி, தாமரைப்பாக்கம் ஆகிய கிராம ஊராட்சிகளில் கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. பெ.சு.தி.சரவணன் அவர்கள் தலைமையில் 'உங்களுடன் ஸ்டாலின் முகாம்' தொடங்கி வைத்தார். மற்றும் அரசு பணியாளர்கள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

## சுகுணா கலை அறிவியல் கல்லூரியில் பட்டிமன்றம் விழா




**கோயமுத்தூர், ஆக.31:** கோயமுத்தூர் நேரு நகர் சுகுணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறை ஒருங்கிணைப்பில் மாணவர்கள் நடத்திய பட்டிமன்ற விழா "சமூக ஊடகங்களின் வளர்ச்சி வரமா ! சாபமா" என்ற தலைப்பில் நடைபெற்றது, இதில் நடுவராக எழுத்தாளர் மற்றும் பட்டிமன்ற பேச்சாளர் மீ .உமாமகேஸ்வரி கலந்து கொண்டு நிகழ்ச்சியினை நடத்தினார்.

இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் ஆர் .ராஜ்குமார் மற்றும் இயக்குனர் வி.சேகர் ஆகியோர் முன்னிலை வகுத்தனர் ,தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் சாந்தாமணி வரவேற்புரை வழங்கினார், கல்லூரி தாளாளர் லட்சுமி நாராயணசாமி மற்றும் தலைவர் சுகுணா லட்சுமி நாராயணசாமி ஆகியோரது வழிகாட்டுதலின்படி இந்நிகழ்ச்சி நடைபெற்றது இதில் ஏராளமா மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்,

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்கள் தாரணி மற்றும் வேணுகோபால் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

# கவிதை அரங்கம்!





குறுஞ்செய்தி
மனம் ஓரமாய்
ஒட்காந்து ஒட்காந்து
ஓயாமல் ஒரு நாள் முழுதும்,
காத்திருக்கிறது
குறிஞ்சி போன்ற -
உன் குறுஞ்செய்தியின்
வருகைக்காக !..

====================

வார்த்தைகள் வஞ்சனை
செய்கிறது
உன்னை வர்ணிக்க
வார்த்தைகள் வஞ்சனை
செய்கிறது !.
வள்ளுவனிடமிருந்து
வார்த்தைகளை
வரவழைத்து வானுயர்ந்த
கோபுரத்தில்
வரி வரியாய் உன்னை
வரைந்து
கொண்டிருக்கிறேன்
வஞ்சிக்கொடி உன்
ஓவியத்தை !.
வாயுதேவனும்
வாயடைத்து நிற்கிறான்
இவ்வார்த்தைகளுக்கு
உரியவள் யார்..?
என்று !.

# "முயற்சியின்மை"

ராமு என்கிற பெரிய சோம்பேறி ஒருவன், குறுக்கு வழியில் எப்படியாவது பணம் சம்பாதித்து விடவேண்டும் என்ற எண்ணம் உடையவன். ஒரு நாள் அவன், ஊருக்கு வந்திருந்த மிகப்பெரிய ஜோதிடர் ஒருவரை சந்தித்து, தனது எண்ணத்தை தெரிவித்தான்.

அதற்கு அந்த ஜோதிடர், உனக்கு லாட்டரி டிக்கெட்டில் 75 லட்சம் ரூபாய் அடிக்கப் போகின்றது என்று கூறினார். இதை கேட்ட ராமு, பரபரப்போடு அந்த ஜோதிடரை பார்த்து, உண்மையாகவா...? எனக்கா...? எப்பொழுது பரிசு விழும்..? எனக்கு பரிசு விழுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்..? என்று ஜோதிடரை கேட்டான்.

அதற்கு அந்த ஜோதிடர், மனம் தளராமல் நீ எப்பொழுதும் இறைவனை வழிபட்டுக் கொண்டிரு..! உன்னுடைய பக்தியை பொறுத்தே அந்த பரிசு உனக்கு விழும்; என்று கூறிச் சென்றார்.

அன்று முதல், அவன் ஒவ்வொரு கோவில்களுக்கும் சென்று வழிபட ஆரம்பித்தான். ஆனால் பரிசு விழவில்லை. சோர்வடைந்த அவன் அடுத்து தேவாலயங்களுக்கு சென்று வழிபட ஆரம்பித்தான். அதிலும் அவனுக்கு பலன் கிடைக்காததால் மசூதிக்கு சென்று வழிபடத் தொடங்கினான். அதிலும் பரிசு விழுந்த பாடில்லை.



எனவே விரக்தியின் உச்சியில் சென்ற ராமு, ஒரு பெரிய மலையில் ஏறி நின்று கடவுளைப் பார்த்து, எனக்கு இப்பொழுது 75 லட்ச ரூபாய் பரிசு விழவில்லை என்றால் நான் மலையில் இருந்து குதித்து இறந்து விடுவேன் என்று உரக்கக் கத்தினான். ஆனால் எந்த பதிலும் கிடைக்கவில்லை. கோபத்தின் உச்சியில் சென்ற ராமு, மலை உச்சியிலிருந்து குதித்து உயிரை விட்டான்.

அதே கோபத்தோடு விண்ணுலகம் சென்ற ராமு, கடவுள் இருக்கும் அறைக்கு முன்பாக சென்று கத்த ஆரம்பித்தான். என்னை ஏன் ஏமாற்றினாய்..? எனக்கு ஏன் பரிசு விழவில்லை..? என்று கூறிக் கத்திக் கொண்டே இருந்தான்.

சப்தத்தைக் கேட்டு வெளிவந்த கடவுளின் உதவியாளர், யார் நீ..? எதற்காக இங்கே வந்து கத்துகிறாய்..? என்று கேட்டான். கடவுளின் உதவியாளரிடம் நடந்த விஷயங்களை அனைத்தையும் கூற, கடவுளின் உதவியாளருக்கும் கடவுள் மீது சற்று கோபம் உண்டாயிற்று. என்ன இந்த கடவுள்..! இவ்வளவு பக்தியாக இருந்தபொழுதும், இப்படி ஒரு அப்பாவியை ஏமாற்றி விட்டாரே..! என்று கூறிக்கொண்டே கடவுளின் உதவியாளர் அவனுடன் சேர்ந்து கத்த ஆரம்பித்தார்.

அந்த நேரத்தில் அறையை விட்டு வெளிவந்த கடவுள், அவர்கள் இருவரையும் பார்த்து, அமைதியாக இருங்கள்..! உங்களுக்கு என்ன பிரச்சனை..? என்று கேட்டார். அதற்கு கடவுளின் உதவியாளர், இவன் அவ்வளவு முயற்சி எடுத்தும், நீங்கள் இவனை ஏமாற்றி விட்டீர்களே...! இதற்கு நீங்கள் கட்டாயமாக பதில் சொல்லித் தான் தீரவேண்டும் என்றார்.

உடனே கடவுள், உதவியாளரை பார்த்து, இத்தனை முயற்சி எடுத்தானே...! அவன் ஒரு லாட்டரி டிக்கெட் வாங்கினானா..? என்று அவனிடம் கேள்; என்றார். கடவுளின் உதவியாளர் ராமுவை பார்த்து லாட்டரி டிக்கெட் வாங்கினாயா..? என்று கேட்க, ஐயோ..! நான் அதை மட்டும் மறந்து விட்டேன்..! என்று கூறினான்..

இந்தக் கதையை போலத்தான் நாமும் எதையாவது ஒன்றை வேண்டும் என்று கடவுளிடம் கேட்டுக்கொண்டே இருக்கின்றோம். தன் குழந்தைகளுக்கு கடவுள் எப்பொழுதுமே கேட்டவற்றை கொடுக்க விரும்புகிறார். ஆனால் கடவுள் போதுமான முயற்சியை மட்டும் நம்மிடம் எதிர்பார்க்கின்றார். எந்த முயற்சியும் இல்லாத பொழுது, கடவுள் யாருக்கும் எதையும் கொடுப்பதில்லை.

ஆதலால் கடவுளிடம் அது வேண்டும்; இது வேண்டும் என்று கேட்பவர்கள், முதலில் போதுமான முயற்சி எடுத்துக்கொண்டு, அதன் பின் கடவுளை வழிபட்டால் வேண்டியது கட்டாயம் கிடைத்தே தீரும்...

# சம்பந்தம்



ராஜனுக்கும் சியாமளாவிற்கும் கவலையாக இருந்தது. தங்கள் ஒரே மகள் திருமணம் எப்படி நடக்குமோ? நல்லபடியாக நடக்க வேண்டுமே என்ற கவலை.

"என்னங்க இந்த பிள்ளையோட அப்பா என்னவோ பார்க்கில் சந்திக்கச் சொல்கிறார். என்ன நடக்குமோ தெரியலை" என்றாள் சியாமளா. நல்லபடியாக முடியவேண்டும். பையன் ஹரி நல்ல படிப்பு, உத்தியோகம். மற்றபடி அம்மா இல்லை. அப்பா மட்டுந்தான்.

"கவலைப்படாத பார்ப்போம்" என்றார் ராஜன். ஏற்கெனவே வந்த வரன் இவர்களைப் பார்த்து "உங்கள் பெண்ணுடன் நீங்க ரெண்டு பேரும் இலவச இணைப்பா?" என்று கேட்டார்கள். நடுத்தர வர்க்கத்தின் நிலை!

மாலையில் பார்க்கிற்கு பையன், பையனின் அப்பா மற்றும் அக்கா வந்திருந்தார்கள்.

"வணக்கம் வணக்கம், நல்லா இருக்கிங்களா?" என்று கேட்டவாறே செய்து எடுத்து வந்திருந்த மைசூர் பாக்குகளை கொடுத்தாள்.

பையர் ஹரியும் ராஜனின் மகள் யுவஸ்ரீயும் கொஞ்சம் தள்ளி அமர்ந்து பேசிக்கொண்டார்கள்.

என்னவோ பேசிக்கொண்டே இருந்தார்கள். எந்த நாட்டையோ பிடிப்பவர்கள் போல இருவரும் பேசிக் கொண்டார்கள்.

ஒற்றை வார்த்தை விழவில்லை. சொந்தங்கள் சிலர் இப்படி தனியாக சந்தித்து பேசுவதை விரும்பவில்லை.

ராஜனும் யோசித்துப் பிறகு ஒரு மனதாக முடிவெடுத்து இந்தச் சந்திப்பிற்கு ஒத்துக் கொண்டார்கள்.

பையனின் அக்கா வேற்று சாதியில் மணம் முடித்திருப்பதால் அப்பா பேசுவதில்லையாம். தம்பி அழைத்ததால் வந்திருப்பதாக பையன் ஹரி சொன்னான்.

அந்தப் பெண் தனியாக ஓரிடத்தில் உட்கார்ந்தவாறு சற்று வெறித்துப் பார்ப்பது போல் தோன்றியது சியாமளாவிற்கு.

பெண்ணைக் கொடுமைப் படுத்துவாளோ? ச்ச ச்ச, இருக்காது. பார்ப்போம் என்று தேற்றிக் கொண்டாள்.

இதற்கிடையில் ராஜனிடம் ஹரியின் அப்பா "சார் நான் சொல்றத நல்லாக் கேட்டுக்கங்க. உங்கப் பெண்ணிற்கு கல்யாணம் ஆனதும் அவளோட சம்பளத்தை எங்கக் கிட்டத்தான் கொடுக்கனும். அடிக்கடி உங்க வீட்டிற்கு போகக்கூடாது. நீங்க நெனச்சப்பெல்லாம் மாப்பிள்ளையோட போன்ல பேசக்கூடாது. தலை தீபாவளிக்கு மட்டும் தான் இரண்டு பேரும் வருவாங்க. வீட்டு வேலையெல்லாம் அவதான் பாத்துக்கனும்".

"இதுக்கெல்லாம் சம்மதமான்னு சொல்லுங்க. உங்க ரெண்டு பேரையும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை அவளுக்குக் கொடுக்கக் கூடாது".

அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சியாமளா குறுக்கிட்டாள்.

"இப்ப என்ன சொல்ல வர்ரீங்க? எங்கப் பெண்ணை நாங்களே செலவு பண்ணி கல்யாணம் என்கிற பேர்ல உங்களுக்கு விற்கச் சொல்றீங்க. நான் எதுவும் சொல்லிக் கூட்டம் கூடறதுக்குள்ள ஒங்கப் பையனை கூட்டிட்டு ஓடிப் போயிடுங்க" என்றாள்.

"எழுந்திரு ஹரி, இவங்க ஒத்து வரமாட்டாங்க, வா வீட்டுக்குப் போகலாம்" என்று நடையைக் கட்டிவிட்டார்.

ஹரிக்கு எப்போது, எப்படி திருமணம் நடக்கும்? கஷ்டம்தான். பாவம் அப்பா சொன்னதும் எதுவும் கேட்காமல் பின்னாலேயே போய்விட்டான்.

யுவஸ்ரீக்கு ஒன்றும் புரியவில்லை. வீட்டிற்கு வந்ததும் அம்மா சொன்ன விஷயம் அதிர்ச்சியாய் இருந்தது.

அம்மா, அப்பா, அவனும் எங்கிட்ட அதையேத்தான் திருப்பி திருப்பிச் சொன்னான். நா விரட்டறதுக்குள்ள நீங்க விரட்டிட்டீங்க. அப்பாடித் தப்பிச்சேன்" என்றாள்.

ஹரியை நினைத்துச் சிரித்தார்கள். அப்பா சொல்வதை அப்படியே செய்யும் பொம்மையாகத் தெரிந்தான்.

"நல்ல நெய்யில செஞ்ச மைசூர் பாகு வேற இவங்களுக்கு, நல்லவேளை பாக்கியை கொண்டுவந்துட்டேன்" என்று சிரித்தாள் சியாமளா.
நல்ல சம்பந்தம் அமையாமலா போய்விடும்? காத்திருப்போம்.

**-வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

# சிரிப்பு வருது.!
# சிரிப்பு வருது.!!




"இத்தனை நாளா கண்ட பசங்களோட சுத்திட்டு இருந்த நம்ம பொண்ணு இப்ப பரவாயில்லீங்க"

"எப்படி சொல்ற?"

"பாருங்க! குழந்தைங்க டிரஸ் தைச்சிட்டுருக்கா பார்த்தீங்களா?"

"நாசமா போச்சு, அவள முதல்ல லேடி டாக்டர்கிட்ட கூட்டிப்போ"



# தினம் ஒரு சமையல்



## கோவக்காய் மோர் குழம்பு


தேவையான பொருட்கள்

கோவக்காய் 150 கிராம் தயிர் ஒரு கப் , பூண்டு 2 பல்
இஞ்சி சிறிய துண்டு, பச்சை மிளகாய் 2
கொத்தமல்லி பொடியாக நறுக்கியது ஒரு கைப்பிடி அளவு
சீரகம் ஒரு டீஸ்பூன், தேங்காய் எண்ணெய் 4 டேபிள் ஸ்பூன்
கடுகு ஒரு டீஸ்பூன், கடலைப்பருப்பு ஒரு டேபிள் ஸ்பூன் உளுந்து ஒரு டேபிள் ஸ்பூன், கருவேப்பிலை ஒரு கொத்து காய்ந்த மிளகாய் 2 மஞ்சள் தூள் 1/4 டீஸ்பூன் உப்பு தேவையான அளவு.

செய்முறை: முதலில் கோவக்காயை தண்ணீரில் கழுவி ஈரம் இல்லாமல் துடைத்து அதன் காம்பு பகுதிகளை நீக்கிவிட்டு சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளுங்கள். அடுத்ததாக ஒரு மிக்ஸி ஜாரை எடுத்து அதில் பூண்டு, தோல் நீக்கப்பட்ட இஞ்சி, பச்சை மிளகாய், கொத்தமல்லி, சீரகம் இவை அனைத்தையும் சேர்த்து கொரகொரப்பாக அரைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது அடுப்பில் ஒரு கடாயை வைத்து அதில் தேங்காய் எண்ணெயை ஊற்ற வேண்டும். எண்ணெய் காய்ந்ததும் அதில் கடுகு, கடலைப்பருப்பு, உளுந்து இவற்றை சேர்க்க வேண்டும். கடுகு வெடித்து, கடலைப்பருப்பும் சிவந்த பிறகு அதில் கருவேப்பிலை, காய்ந்த மிளகாய் சேர்க்க வேண்டும். அடுத்ததாக நாம் நறுக்கி வைத்திருக்கும் கோவக்காயையும் சேர்த்து வதக்கி விட வேண்டும். அடுத்ததாக இதில் மஞ்சள் தூள், தேவையான அளவு உப்பு, சிறிதளவு மட்டும் தண்ணீர் ஊற்றி ஐந்து நிமிடம் மூடி போட்டு கோவக்காயை வேக வைத்துக் கொள்ளுங்கள். பிறகு மூடியை திறந்து நாம் ஏற்கனவே அரைத்து வைத்திருந்த விழுதை அதில் சேர்த்து இரண்டு நிமிடம் பச்சை வாடை போகும் வரை வதக்க வேண்டும். பச்சை வாடை போன பிறகு அடுப்பை அணைத்துவிட்டு அதில் கெட்டியாக இருக்கக்கூடிய புளிக்காத தயிரை ஊற்றி நன்றாக கலந்து விட வேண்டும். அவ்வளவுதான் சுவையான கோவக்காய் மோர் குழம்பு தயாராகிவிட்டது.



# கண் வறட்சிக்குத் தீர்வு.. நெய் தரும் அற்புத நன்மைகள்!



கண்களின் வறட்சியை (DRY EYES) குறைக்க நெய் எப்படி உதவுகிறது? நெய்யின் மருத்துவ குணங்கள், பயன்படுத்தும் முறைகள் மற்றும் கண்களுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி நிபுணர் விளக்கம் இங்கே.



இன்றைய டிஜிட்டல் யுகத்தில், பெரும்பாலானோர் கணினி, மொபைல் மற்றும் டிவி போன்ற திரைகளின் முன் நீண்ட நேரம் செலவிடுவதால், கண் வறட்சி (DRY EYES) பிரச்சனையை அடிக்கடி சந்திக்க வேண்டியிருக்கிறது. இதனுடன் தூக்கமின்மை, தூசி, தவறான உணவுப் பழக்கம் போன்ற காரணிகளும் கண் வறட்சியை அதிகரிக்கச் செய்கின்றன.

இந்நிலையில், பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட நெய் கண் ஆரோக்கியத்திற்கு அற்புத நன்மை தரும் என்று ஜெய்ப்பூர் பாபுநகரில் உள்ள இயற்கை மருத்துவமனையின் மூத்த மருத்துவர் டாக்டர் கிரண் குப்தா பரிந்துரைக்கிறார்.

**நெய்யின் நன்மைகள்:**

டாக்டர் கிரண் குப்தா கூறியதாவது, “நெய்யில் ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள், வைட்டமின்கள் A, E, K மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட்கள் போன்ற பல ஊட்டச்சத்துக்கள் உள்ளன. இவை கண்களில் ஈரப்பதத்தை பராமரிக்கவும், திசுக்களை புதுப்பிக்கவும் உதவுகின்றன. அதனால் கண் வறட்சியால் பாதிக்கப்படுபவர்கள், நெய்யை எளிய முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்” என்றார்.

**கண்களுக்கு நெய் தரும் நன்மைகள்**

**திசுக்களுக்கு உயவூட்டம் தரும்**

நெய்யில் உள்ள ஊட்டச்சத்துக்கள் தோல் திசுக்களுக்கு நன்மை பயக்கும். கண்களில் இதைப் பயன்படுத்துவது கண்களில் ஈரப்பதத்தைப் பராமரிக்கவும், கண்ணீரின் லிப்பிட் அடுக்கை மேம்படுத்தவும் உதவுகிறது.

**வீக்கம் மற்றும் சோர்வை குறைக்கும்**

நெய்யில் உள்ள பியூட்ரிக் அமிலம் (BUTYRIC ACID) மற்றும் அலர்ஜி எதிர்ப்பு பண்புகள் கண் வீக்கத்தையும் சிவத்தலையும் குறைக்கின்றன. கண் சோர்வு, உலர்ச்சி ஆகியவற்றில் சாந்தம் அளிக்கிறது.

**திசுக்களை சரிசெய்யும்:** வைட்டமின்கள் மற்றும் ஒமேகா-3 கொழுப்பு அமிலங்கள் கண் செல்களை புதுப்பிக்க உதவுகின்றன. ஃப்ரீ ரேடிக்கல்களால் ஏற்படும் சேதத்தை தடுக்கும் தன்மை கொண்டது.

**கண்களில் நெய்யை எப்படி பயன்படுத்தலாம்?**

சொட்டு மருந்து: ஆயுர்வேத சிகிச்சைகளில், தூய நெய்யை சொட்டு மருந்தாக பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. இது கண் உலர்ச்சியை குறைத்து ஈரப்பதத்தை அதிகரிக்கிறது.

# அனுஷ்காவின் Ghaati படத்திற்கு யு/ஏ சான்றிதழ்!




அனுஷ்கா காதி (Ghaati) என்ற தெலுங்கு திரைப்படத்தில் நடித்துள்ளார்.

நடிகை அனுஷ்கா தமிழ் மற்றும் தெலுங்கு சினிமாவில் பல வெற்றி திரைப்படங்களில் கதாநாயகியாக நடித்துள்ளார். கடந்த ஆண்டு வெளியாகி நல்ல வரவேற்பை பெற்ற "Miss ஷெட்டி MR பொலிஷெட்டி" திரைப்படத்தில் கதாநாயகியாக நடித்து இருந்தார்.

அதைத் தொடர்ந்து அனுஷ்கா காதி (Ghaati) என்ற தெலுங்கு திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை கிரிஷ் ஜகர்லமுடி இயக்கியுள்ளார்.

இப்படத்தின் மூலம் நடிகர் விக்ரம் பிரபு தெலுங்கில் அறிமுகமாகிறார். இத்திரைப்படம் வரும் செப்டம்பர் 5 ஆம் தேதி வெளியாகிறது. இந்நிலையில் படத்திற்கு தணிக்கை குழு யு/ஏ சான்றிதழை வழங்கியுள்ளது.






சமுத்திரக்கனியின் சாட்டை படத்தில் நடித்து தமிழ் சினிமாவில் அறிமுகம் ஆனவர் மஹிமா நம்பியார். அதற்கு பிறகு ஏராளமான படங்களில் அவர் நடித்து இருக்கிறார். அவரது லேட்டஸ்ட் கிளாமர் போட்டோஷூட் ஸ்டில்கள் இதோ.

# 'சின்ன பாப்பா பெரிய பாப்பா' இயக்குநர் மறைவு



'சின்ன பாப்பா பெரிய பாப்பா' சீரியல் இயக்குநர் எஸ்.என். சக்திவேல் உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 60.

90-களில் சன் டிவியில் பிரபலமாக இருந்த நகைச்சுவை தொடர் 'சின்ன பாப்பா பெரிய பாப்பா'. இந்த தொடர் அப்போதும் பெரிய வரவேற்பை பெற்றது. இதில் ஸ்ரீபிரியா, நளினி, தேவதர்ஷினி, நிரோஷா உள்ளிட்டோர் நடித்தனர். இதில் 'பட்டாபி' என்ற கதாபாத்திரத்தில் எம். எஸ்.பாஸ்கர் நடித்திருந்தார். இந்த கதாபாத்திரம் பெற்ற வரவேற்புதான் அவர் தமிழ் சினிமாவில் நுழைய காரணமாக அமைந்தது.

இத்தொடரின் இயக்குநர் எஸ்.என்.சக்திவேல் இன்று அதிகாலை உடல்நலக்குறைவால் காலமானார். இவர் 2015-ல் வெளியான 'இவனுக்கு தண்ணில கண்டம்' என்ற படத்தையும் இயக்கியிருந்தார். பிறகு 'பட்ஜெட் குடும்பம்' என்ற சீரியலையும் இயக்கினார்.

எஸ்.என்.சக்திவேல் மறைவுக்கு நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் இரங்கல் தெரிவித்து வீடியோ வெளியிட்டுள்ளார். அதில் பேசிய அவர், “எஸ்.என். சக்திவேல் எனக்கு வாழ்க்கையில் கிடைத்த மிகப்பெரிய நலம் விரும்பி. 'பட்டாபி' என்ற கதாபாத்திரத்தின் மூலமாக தமிழக மக்களிடையே எனக்கு பெயர் கிடைத்து இந்த அளவுக்கு நான் வந்திருக்கிறேன் என்றால் அதற்கு சக்திவேல்தான் காரணம்.

இன்று அதிகாலை அவர் இறந்த செய்தியை கேள்விப்பட்டது எனக்கு மிகுந்த வேதனையாக இருந்தது. போராட்டம்தான் அவர் வாழ்க்கை. அவரது ஆன்மா இறைவன் நிழலில் இளைப்பாறட்டும். இனிமேல் எந்த பிறப்பில் பார்க்கப் போகிறோம் என்பது ஒரு மிகப்பெரிய கேள்விக்குறி” என்று தெரிவித்தார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com